# சென்னையில் ஜூலை 24, 25, 26-ல் நடைபெறுகிறது பேரிடர் அபாயம் குறைப்பு குறித்த ஜி-20 கூட்டம்: முன்னேற்பாடுகள் செய்ய தலைமைச் செயலர் உத்தரவு




**சென்னை:** பேரிடர் அபாய குறைப்பு தொடர்பாக ஜி-20 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் கூட்டம் சென்னையில் வரும் ஜூலை 24, 25, 26-ம் தேதிகளில் நடக்க உள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் குறித்து தமிழக தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த 2022 டிச.1 முதல் 2023நவ.30-ம் தேதிவரை நடைபெறஉள்ள ஜி-20 மாநாட்டுக்கு இந்தியா தலைமை வகிக்கிறது.

இந்தியா தலைமையில் ஜி-20ல் பேரிடர் அபாயத்தை குறைப்பதற்கான புதிய பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட பணிக்குழுவின் 3 கூட்டங்களை வெவ்வேறு நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டு, காந்தி நகர், மும்பையில் 2 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. சென்னையில் 3-வது கூட்டம்வரும் ஜூலை 24, 25, 26-ம் தேதிகளில் நடைபெறுகிறது.

இதற்கான முன்னேற்பாடுகள் குறித்து துறைகளின் ஒருங்கிணைப்பு கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்தது. இதற்கு தலைமை வகித்த தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, கூட்டத்தில் பங்கேற்ற தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய அலுவலர்களை வரவேற்றார். 3 நாள் கூட்டத்தை சிறப்பாக நடத்த அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்யுமாறு சம்பந்தப்பட்ட துறை செயலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய உறுப்பினர் செயலர் கமல் கிஷோர், உறுப்பினர் ராஜேந்திர சிங், ஜி-20 மாநாட்டின் இயக்குநர் மிருணாளினி ஸ்ரீவஸ்தவா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பிரத்யேக சரக்கு ரயில் போக்குவரத்து வழித்தடம்: பிரதமர் மோடி நாட்டுக்கு நாளை அர்ப்பணிக்கிறார்**



**வாரணாசி**: உத்தர பிரதேச மாநிலம் தீன்தயாள் உபாத்யாயா - பிஹார் மாநிலம் சோன் நகர் இடையே 137 கி.மீ. தொலைவுக்கு அமைக்கப்பட்டுள்ள சரக்கு ரயில் வழித்தடத்தை பிரதமர் நரேந்திர மோடி நாளை (ஜூலை 7) நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

பொருளாதார மேம்பாட்டுக்காக நாட்டின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் பணியில் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இதையொட்டி, பிரத்யேக சரக்கு ரயில் வழித்தடங்களை அமைத்து,

நேரத்தை மீதப்படுத்தவும், செலவைக் குறைக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

இதையடுத்து, 9 மாநிலங்கள் வழியாக 3,381 கி.மீ. தொலைவுக்கு பிரத்யேக வழித்தடம் அமைக்கும் பணிகள் 8 ஆண்டுகளுக்கு முன்தொடங்கின. இதற்காக 11,827 ஹெக்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. 125 ரயில் நிலையங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டன. பல்வேறு இடங்களில் இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், உத்தர பிரதேச மாநிலம் தீனதயாள் உபாத்யாயா-பிஹார் மாநிலம் சோன் நகர் இடையே 137 கி.மீ. தொலைவுக்கு அமைக்கப்பட்டுள்ள பிரத்யேக சரக்கு வழித்தடத்தை பிரதமர் மோடி நாளை நாட்டுக்கு அர்ப்பணிக்க உள்ளார்.

**வந்தே பாரத் ரயில் சேவை:** உத்தர பிரதேச மாநிலம் கோரக்பூரில் நடைபெறும் விழாவில், கோரக்பூர்-லக்னோ இடையிலான வந்தே பாரத் ரயில் சேவை உள்ளிட்ட திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

தற்போது பயன்பாட்டுக்கு வரும் புதிய சரக்கு ரயில் வழித்தடம் மூலம், பிஹார் மாநிலம் சோன்நகர் முதல் குஜராத் மாநிலம் அகமதாபாத் வரை 2,196 கி.மீ. தொலைவுக்கு பிரத்யேக சரக்கு ரயில் வழித்தடம் பயன்பாட்டுக்கு வருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் சரக்கு வழித்தடப் பணிகள் முழுவதையும் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய அர்ப்பணிப்பு சரக்கு ரயில் வழித்தடக் கழக துணைப் பொது மேலாளர் (கார்ப்பரேட் பிரிவு) சித்ரேஷ் ஜோஷி, `இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறியதாவது: நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கு பிராந்தியத்தை இணைக்கும் வகையில் 3,381 கி.மீ. தொலைவுக்கு பிரத்யேக வழித்தடம் அமைக்கப்படுகிறது. தற்போது

வரை 2,196 கி.மீ. தொலைவுக்கு வழித்தடம் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் மீதமுள்ள பணிகளையும் முடித்துவிடுவோம்.

முன்பு சரக்கு ரயில்கள் மணிக்கு 30 முதல் 40 கி.மீ. வேகத்தில் இயக்கப்பட்டன. பிரத்யேக பாதை அமைக்கப்பட்டுள்ளதால், மணிக்கு 80 கி.மீ. முதல் 100 கி.மீ. வேகத்தில் ரயில்களை இயக்க முடியும். இதனால், குறைந்த நேரத்தில், அதிக சரக்குகளை எடுத்துச் செல்லமுடியும். பிரத்யேக சரக்கு ரயில் வழித்தடத்தால், சரக்கு போக்குவரத்து செலவு 15 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாக குறையும். இவ்வாறு சித்ரேஷ் ஜோஷி கூறினார்.

## இந்திய மகளிர் கிரிக்கெட் அணியில் கேரள பழங்குடி பெண் - யார் இந்த மின்னு மணி?



**மும்பை**: வங்கதேசத்துக்கு எதிரான டி20 கிரிக்கெட் தொடரில் இந்திய மகளிர் அணியில் இடம்பிடித்துள்ளார் பழங்குடி பெண் மின்னு மணி. சீனியர் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியில் கேரள கிரிக்கெட் வீராங்கனை ஒருவர் இடம் பெறுவது இதுவே முதல்முறை.

தடகளம், கால்பந்து மற்றும் கைப்பந்து போன்ற விளையாட்டுகளில் மிகப்பெரிய நட்சத்திரங்களை உருவாக்கிய கேரள மாநிலம், இந்திய விளையாட்டுகளின் சக்தி மையங்களில் ஒன்றாக இருந்தாலும், கிரிக்கெட் என்று வரும்போது விரல்விட்டு என்னும் அளவுக்கே

அம்மாநிலத்தில் இருந்து தேசிய அணியில் வீரர்கள் இடம்பிடித்துள்ளனர். டினு யோஹன்னன், எஸ். ஸ்ரீசாந்த், சஞ்சு சாம்சன் மற்றும் சந்தீப் வாரியர் ஆகிய நான்கு பேர் மட்டுமே இதுவரை இந்தியாவுக்காக விளையாடியுள்ளனர்.

ஆண்கள் கிரிக்கெட்டுக்கே இந்த நிலை என்றால், மகளிர் கிரிக்கெட்டுக்கு கேரளத்தில் இருந்து இதுவரை யாரும் தேர்வு செய்யப்படாத நிலை இருந்தது. தற்போது அதனை மாற்றி வரலாறு படைத்துள்ளார், 24 வயதான பழங்குடி பெண்ணான மின்னு மணி. இந்தியாவுக்காக விளையாடும் முதல் மலையாளி இவர் அல்ல. மலையாளியான சூசன் இட்டிச்சேரியா இதற்கு முன் இந்திய அணிக்கு தேர்வானாலும் அவர் தமிழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**யார் இந்த மின்னு மணி**?: எழில்கொஞ்சும் வயநாட்டில் உள்ள பட்டியல் பழங்குடியினரில் ஒன்றான குறிச்சியா பழங்குடியினத்தைச் சேர்ந்த மின்னு, வங்கதேசத்துக்கு எதிரான டி20 கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் இடம்பிடித்து சாதனை படைத்துள்ளார்.

வயநாட்டில் உள்ள தனது வீட்டிற்கு வெளியே வயல்வெளியில் அக்கம்பக்க சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடும் போது ஒரு பீல்டராக பந்துகளை எடுக்கச் சென்ற மின்னு, ஒருகட்டத்தில் தானும் கிரிக்கெட்டை நேசிக்க துவங்கினார். சிறுவர்களுடன் விளையாடும் போது, மின்னு ஒரு பீல்டராக மட்டுமே இருப்பார், பேட் செய்யவோ அல்லது பந்து வீசவோ அவருக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது. குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் அவர் கிரிக்கெட் விளையாடுவது பிடிக்காது. காரணம் கிரிக்கெட், பெண்களின் விளையாட்டு அல்ல என்று கருதப்பட்டதே. ஆனால் மின்னு விளையாடுவதை நிறுத்தவில்லை. அந்த அளவுக்கு கிரிக்கெட் மீது அவருக்கு விருப்பம்.

அந்த விருப்பத்துக்காக அங்கீகாரம், அவர் படித்த பள்ளியில் கிடைத்தது.

பள்ளியில் விளையாடத் தொடங்கியபோது, சிறப்புக் கல்வி ஆசிரியர் எல்சம்மா விளையாட்டில் மின்னுவின் திறமையைக் கவனித்து, வயநாடு கிரிக்கெட் சங்கப் பயிற்சியாளர் ஷானவாஸிடம் அவரை அறிமுகப்படுத்தினார். பின்னர் ஷாநவாஸ் வயநாடு மாவட்ட சங்கம் மாவட்ட அளவில் இருந்து, மாநில அளவிலும், பின்னர் தென்னிந்திய அளவிலும் மின்னுவின் திறமை வயநாட்டில் கேரள கிரிக்கெட் சங்கம் அமைத்த மகளிர் அகாடமி மூலம் வெளிப்பட, ஒன்பதாம் வகுப்பு முதல் இளங்கலைப் பட்டம் வரை, அந்த கிரிக்கெட் அகாடமியில் பயிற்சிபெற்றார். பயிற்சி செய்யக்கூடிய மைதானத்திற்குச் செல்ல மின்னுவின் வீட்டில் இருந்து ஒன்றரை மணிநேரம் பயணிக்க வேண்டியிருந்தது.

அந்த சோதனைகளை கடந்து சாதித்தவருக்கு, சில மாதங்களுக்கு முன்பு நடந்து முடிந்த, முதல் மகளிர் பிரீமியர் லீக்கில் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிக்காக களமிறங்கும் வாய்ப்பு உண்டானது. விளையாடிய மூன்று ஆட்டங்களில் அவரால் முத்திரை பதிக்க முடியவில்லை என்றாலும் உள்நாட்டு போட்டிகளில் வெளிப்படுத்திய சிறந்த ஆட்டத்தால் மின்னுவை தேர்வாளர்களால் புறக்கணிக்க முடியவில்லை. தற்போது இந்திய சீனியர் அணியில் இந்திய வீராங்கனைகளில் ஒருவராக இடம்பிடித்துள்ளார் மின்னு.

டாப் ஆர்டர் பேட்டிங் மற்றும் வலது கை ஆஃப் ஸ்பின்னர் மட்டுமல்ல, மின்னு சிறந்த பீல்டரும் கூட. இந்திய அணிக்கான ஆல்-ரவுண்டராக மின்னுவின் தேர்வு கேரளாவின் இளம் பெண் கிரிக்கெட் வீராங்கனைக்கு நிச்சயம் உத்வேகம் அளிக்கும்.

## ஐஸ்லாந்தில் 24 மணி நேரத்தில் 2,200 நிலநடுக்கங்கள் - காரணம் என்ன?



**ரெய்க்யவிக்:** ஐஸ்லாந்து தலைநகர் ரெய்க்யவிக்கில் கடந்த 24 மணி நேரத்தில் 2,200 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐஸ்லாந்தின் வானிலை ஆய்வு ஆய்வு மையம் தரப்பில், "ரெய்க்யவிக் பகுதியில் கடந்த 24 மணி நேரத்தில் 2,200 நிலநடுக்கங்கள் பதிவாகியுள்ளன. இந்த நிலநடுக்கங்கள் நாட்டின் தென் பகுதியில் பரவலாக உணரப்பட்டுள்ளன. இந்த நிலநடுக்கங்கள் எரிமலை சீற்றம் விரைவில் ஏற்படக்கூடும் என்பதற்கான சமிக்ஞைகளாக கருதப்படுகின்றன. இதில் பல நில நடுக்கங்கள் மிதமான ( ரிக்டர் அளவில் 4.1 ) அளவில் பதிவாகியுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் ஐஸ்லாந்துதான் எரிமலைகள் செயல்பாட்டில் உள்ள பகுதியாக உள்ளது. மேலும் ஐஸ்லாந்து வடக்கு அட்லாண்டிக் தீவு, மத்திய அட்லாண்டிக் ரிட்ஜ் , ஐ யூரேசிய மற்றும் வட அமெரிக்க டெக்டோனிக் தகடுகளை பிரிக்கிறது. இதன் காரணமாக ஐஸ்லாந்தில்

ஏற்படும் நிலநடுக்கங்கள் நிச்சயம் அச்சத்தை தரக் கூடியவை என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னர் ஏப்ரல் 2010 ஆம் ஆண்டு ஐஸ்லாந்தில் ஹே ஜஃப்ஜல்லாஜோகுல் எரிமலை வெடிப்பு காரணமாக 1,00,000 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால் 1 கோடிக்கும் அதிகமான பயணிகள் சிக்கித் தவித்தனர். 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளிலும் ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு ஏற்பட்டது. இந்த நிலையில் ரெய்க்யவிக்கில் ஏற்பட்ட நில நடுக்கங்கள் நிச்சயம் கண்காணிக்கப்பட வேண்டியை என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## உலகின் அதிக வெப்பமான நாள் ஜூலை 3, 2023: எச்சரிக்கும் சூழலியல் விஞ்ஞானிகள்



கடந்த மே மாதம் சீனாவின் ஷாங்காய் நகரில் 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிக வெப்பம் பதிவான நாளில் சாலையில் மக்கள் வெப்ப தற்காப்பு கவசங்களுடன் பயணித்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம்.

அதிக வெப்பமான நாள், குளிர்ச்சியான நாள் போன்ற புள்ளிவிவரங்களை பதிவு செய்யும் பழக்கம் ஆராய்ச்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட காலம் தொடங்கியதிலிருந்து கடந்த 3 ஆம் தேதி (ஜூலை 3, 2023) தான் உலகின் அதிக வெப்பமான நாள் என்று கணக்கிடப்பட்டுள்ளதாக சூழலியல் ஆய்வுக்கான அமெரிக்க மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஜூலை 3, 2023 அன்று சர்வதேச சராசரி வெப்பநிலை என்பது 17.01 டிகிரி செல்சியஸ் (62.62 ஃபேரன்ஹீட்) ஆக இருந்தது. இது முன்னதாக கடந்த ஆகஸ்ட் 2016ல் பதிவான 16.92 டிகிரி செல்சியஸ் (62.46 ஃபேரன்ஹீட்) அளவைவிட அதிகமாகும்.

அமெரிக்காவின் தென்பகுதி கடந்த சில வாரங்களாக வாட்டும் வெப்பத்தால் பாதிக்கப்பட்டது. அதேபோல் சீனாவிலும் பல பகுதிகளில் வெப்ப அலை வீசியது. அங்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சராசரியாக அன்றாடம் 35 டிகிரி செல்சியஸுக்கு மேலேயே வெப்பம் பதிவானது. அதேபோல் வடக்கு ஆப்பிரிக்காவில் சமீப காலமாக சராசரி வெப்ப 50 டிகிரி செல்சியஸ் என்றளவில் பதிவாகி வந்தது.

அண்டார்டிகாவில்கூட இந்த ஆண்டு குளிர்காலத்தில் வழக்கத்தைவிட வித்தியாசமான அளவுகளில் அதிகபட்ச வெப்பநிலை பதிவானது. அர்ஜென்டைன் தீவுகளில் உள்ள உக்ரைனின் வெர்னாட்ஸ்கி ஆய்வுத் தளத்தில் அண்மையில் 8.7 டிகிரி செல்சியஸ் பதிவானது. இது இந்தப் பகுதியில் இதற்கு முந்தைய ஜூலை மாதங்களில் பதிவாகாத அளவு என்று ஆராய்ச்சியாளர்கள் வேதனை தெரிவித்தனர்.

**மக்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் மரண ஒலி:** இந்த காலநிலை மாற்றம் குறித்து லண்டனின் கிராந்தம் இன்ஸ்டிட்யூட் ஃபார் க்ளைமேட் சேஞ்ச் கல்லூரியின் சூழலியல் விஞ்ஞானி ஃப்ரெட்ரிக் ஆட்டோ கூறுகையில், "இந்த வெப்பநிலையானது ஏதோ ஒரு மைல்கல் என நினைக்க வேண்டாம். இது நாம் கொண்டாடும் எண் அல்ல. உண்மையில் இது மக்களுக்கும், சுற்றுச்சூழலுக்குமான மரண ஒலி" என்றார். இந்த உச்சபட்ச வெப்பநிலையானது நேரடியாக எல் நினோ தாக்கத்தின் விளைவு என்று சூழலியல் ஆராய்ச்சியாளர்கள் பலரும் கூறுகின்றனர்